## பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை (NEVIDA)

(நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு)

### பதவி வெற்றிடங்கள்

2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுடன் இணைக்கப்பட்ட பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபைக்கு **சாரதி** (வெற்றிடம் - 03) பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

| **சாரதி - வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03** |
|---|
| **01. சம்பள அளவுத்திட்டம்** : PL 3-2016<br>Rs [26,290 -10 x 270 -10 x 300 -10 x 330 - 12 x 350 - 39,490/-] (மாதாந்தம்)<br>**02. வயது**<br>விண்ணப்பதாரர் 29.06.2024 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயது வரம்பு பொருந்தாது)<br>**03. தகுதிகள்:-**<br>**வெளியக விண்ணப்பதாரிகள்**<br>01. க.பொ.த (சாதாரண)தரப் பரீட்சையில் குறைந்தது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அத்தடன் இரண்டு (02) தடவைக்கு மேற்படாமல் இரண்டு (02) பாடங்களில் சாதாரணசித்தி (C) பெற்றிருக்க வேண்டும்.<br>**அத்துடன்**<br>கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் மற்றும் குறைந்த பட்சம் மூன்றாண்டு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**உள்ளக விண்ணப்பதாரிகள்**<br>01. கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன அனுமதி பத்திரம் பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்த பட்சம் மூன்றாண்டு காலம் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>02. முதன்மை அரை திறன் (PL 2) அல்லது முதன்மை திறமையற்ற (PL1) ஒரு பதவியில் குறைந்த பட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்திருத்தல் வேண்டும். |

**04. வேறு தகைமைகள்**

**ஓவ்வொரு விண்ணப்பதாரரும்**

I. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
II. பதவிக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை சிறப்பாகச் செய்வதற்கும், தீவின் எப்பாகத்திலும் கடைமையாற்றுவதற்கு போதுமான உடல் , உள தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
III. சிறந்த நன்நடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

**05. ஆட்சேர்ப்பு முறை**

விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட குழுவினால் நடாத்தப்படும் செயன்முறை தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் தகுதியின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும். (ஒவ்வொரு ஆட்சேர்ப்பிற்கும் அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகள் பொருந்தும்)

**06. நியமனத்தின் தன்மை :-**

இந்த பதவி நிரந்தரமானதுடன் மற்றும் ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கு ஏற்புடையவை.

**07. விண்ணப்ப பத்திரங்களை முன்வைத்தல்**

மேற்படி பதவிக்கு அனைத்து வகையிலும் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அமைச்சின் www.smehci.gov.lk என்ற இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் படி தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், கல்வி சான்றிதழ்கள், பதவி அனுபவ சான்றிதழ்கள், அத்துடன் வேறு தகுதி மற்றும் சேவைச் சான்றிதழ்களின் பிரதியுடன் **தலைவர், புதிய பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை , இல 45, புனித மைக்கல் வீதி , கொழும்பு - 03** என்ற முகவரிக்கு **29.06.2024** ஆந் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் சமர்ப்பிக்க வேண்டும். (**விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.**)

தற்போது அரச/அரச கூட்டுத்தாபனம் /நியதிச்சட்டசபையில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் அவர்களின் நிறுவனத்தலைவர் ஊடாக மேற்கண்ட முகவரிக்கு **29.06.2024** ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும்.

காலதாமதமான விண்ணப்பங்கள், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

**08. ஏனைய விபரங்கள்**

மேலதிக தகவல்கள் www.smehci.gov.lk என்ற இணையத்தளத்தில் பதவி வெற்றிடத்தின் கீழ் பார்வையிடலாம்

**தலைவர்,**
**பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல 45,**
**புனித மைக்கல் வீதி ,**
**கொழும்பு -03**